முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 350, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

350—

உருது தொடக்கப் பள்ளி

***14262—திரு. கு. லிங்கமுத்து:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டில் உருது தொடக்கப் பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், பேரணாம்பட்டு நகராட்சி, இமாம் மதீத் பகுதியில் புதிய உருது தொடக்கப் பள்ளி தொடங்குவதற்கான நிபந்தனைகளை நிறைவு செய்வதால், அப்பகுதியில் புதிய உருது தொடக்கப் பள்ளி தொடங்குவதற்குப் பரிசீலனை செய்யப்படும் என்கிற தகவலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கேட்புக் கொடி ஏந்திய தோழரின் கேள்விக்கு அரசு பச்சைக் கொடி காட்டியிருக்கிறது" என்கிற நல்ல தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 ஏப்ரல் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

திரு. கு. லிங்கமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு நகரம் இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வாழும் நகரம். இங்கு தலைக்காடு என்னும் பகுதியில் 1,000-க்கும் மேல் முஸ்லீம் குடும்பங்கள் உள்ளன. இங்கிருந்து உருது ஆரம்பப் பள்ளிக்குச் செல்ல சுமார் 2 கி.மீ. தூரம் நகரின் உள்ளேயே நடந்து செல்ல வேண்டியுள்ளது. அப்படி நடந்து செல்லும் நகரின் குறுக்கே கர்நாடகா, ஆந்திரா செல்லும் தேசிய நெடுஞ்சாலைகளும், அதற்கடுத்தாற்போல் ஆம்பூர் செல்லும் நெடுஞ்சாலையும் இருக்கின்றன. அவை விபத்துகள் ஏற்படக்கூடிய பகுதிகளாக இருப்பதாலும், குழந்தைகள் அந்தப் பகுதிகளைக் கடந்து செல்ல பயப்படுவதாலும், என்னுடைய கோரிக்கை குறித்து பரிசீலித்து ஆவன செய்யப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

மாமல்லபுரத்தில் 25-4-2013 அன்று நடைபெற்ற சித்திரைத் திருவிழா நிகழ்ச்சி—மரக்காணத்தில் நடைபெற்ற சம்பவம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 25-4-2013 அன்று மாமல்லபுரத்தில் நடைபெற்ற சித்திரைத் திருவிழா நிகழ்ச்சியைத் தொடர்ந்து, மரக்காணத்தில் நடைபெற்ற சம்பவம் குறித்து தேசிய முற்போக்கு திராவிட கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ச. இராமச்சந்திரன் மற்றும் உறுப்பினர்கள் திரு. எஸ். வெங்கடேசன், திரு. ர.ம. பாபு முருகவேல், திரு. அ. பாஸ்கர், திரு. எஸ்.ஆர். பார்த்திபன் ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சௌந்தரராசன், செல்வி கே. பாலபாரதி,